பொது சுற்றறிக்கை இல.: 02 - 21 / 2013
திகதி : 16 / 12 / 2012

# பிரதேச பொது சுகாதார மேற்பார்வைத் தாதி உத்தியோகத்தரின் கடமைப் பட்டியல்

## 1. பரிபாலனத்திற்குத் தேவைகள்

1.1 பிரதேச பொது சுகாதார மேற்பார்வைத் தாதிய உத்தியோகத்தர் மாவட்ட செயற்திட்டக் குழுவில் அங்கத்தவராகவும், தேவையேற்படின் தாய் சேய் நலம் குறித்த வழிகாட்டலை வெளிக்கள பொதுச் சுகாதார உத்தியோகத்தர்களுக்கு தாய் சேய் நல வைத்திய அதிகாரியுடன் இணைந்து வழங்குபவராகவும் இருத்தல்.

1.2 இவரின் பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளரின் நேரடி மேற்பார்வையின் கீழ் தனது காரியாலயத்தைப் பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் தாய் சேய் நலப் பிரிவில் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள இணைப்பு 1 இன் பிரகாரம் பராமரித்தல் வேண்டும்.

1.3 கடமை நேரங்கள்
வார நாட்களில் காலை 8.30 முதல் மாலை 4.15 வரை
சனி, ஞாயிறு தினங்களிலும், பொது விடுமுறை நாட்களிலும் - விடுமுறை
புதன் கிழமை அலுவலக நாளாகக் கொள்ளப்படும்
வெளிக்கள வேலைகளில் ஈடுபடும் போது கடமை நேரங்கள் மாற்றமடையாலம்.

1.4 இவரின் கடமைகள் ஏற்கனவே தயாரிக்கப்பட்டு பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளரால் அனுமதிக்கப்பட்ட மாதாந்தக் கடமை அட்டவணையின் பிரகாரம் மேற்கொள்ளப்படல் வேண்டும். அடுத்த மாதத்திற்குரிய கடமை அட்டவணையின் பிரதி முந்திய மாதத்தின் 25ஆம் திகதிக்கு முன் பொதுச் சுகாதார தாதிப் பணிப்பாளரிற்கு அனுப்பப்படல் வேண்டும். பிரதியொன்று அலுவலகத்தில் வைக்கப்படல் வேண்டும்.

1.5 சுகாதார அமைச்சின் பரிந்துரைகளுக்கு ஏற்ப தினக்குறிப்பேடு பராமரிக்கப்பட்டு எதிர்வரும் மாதத்தின் 5ஆம் திகதிக்கு முன் பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளரிடம் கையளிக்கப்பட வேண்டும்.

1.6 இவர் தனது பகுதியில் கடமைகளை மேற்கொள்ளும் போது அரசாங்கத்தால் ஏற்றுக்கொண்ட சீருடை அணிதல் வேண்டும்.

## 2. திட்டமிடல்

2.1 இவர் மாவட்ட தாய் சேய் நல அபிவிருந்தித் திட்டத்தயாரிப்பின் போது தாய் சேய் சுகாதார வைத்திய அதிகாரிக்கு உதவ வேண்டும். இது மாவட்ட முழு சுகாதாரத் திட்டத்தில் மிக முக்கியமான பகுதியாகும்

2.2 மாவட்ட சுகாதாரக் குழுக்களுடன் சேர்ந்து மேற்பார்வைகளுக்கான வருடாந்த, காலாண்டுத் திட்டத்தைத் திட்டமிடுவதற்கு உதவுதல். அத்துடன் இவை திட்டத்திலுள்ளவாறு நடைமுறைப் படுத்தப்படுவதை உறுதிப்படுத்தல்.

## 3. மேற்பார்வை

3.1 இவர் மாவட்ட மேற்பார்வைக் குழுவின் அங்கத்துவராகவும் பின்வரும் உத்தியோகத்தர்களையும், இடங்களையும் மேற்பார்வை செய்தல் வேண்டும்.

பொது சுகாதார தாதிய உத்தியோகத்தர்
மேற்பார்வைக் குடும்ப நல சுகாதார உத்தியோகத்தர்
குடும்ப நல சுகாதார உத்தியோகத்தர்
பிணியாய்வு நிலையங்கள் - தாய் சேய் நலம் / குடும்பத்திட்டமிடல் / சுக வனிதையர்
வெளிக்கள நிறை அளக்கும் நிலையங்கள்
வெளிக்களப் பகுதிகள்

3.2 தேவைக்கு ஏற்பவும் கடமையில் இருக்கும் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கைக்கு ஏற்பவும் மாதாந்தம் குறைந்தது **ஆறு மேற்பார்வைகள்** கட்டாயமாகச் செய்யப்படல் வேண்டும். அறிக்கையின் ஒரு பிரதி தாய் சேய் சுகாதார வைத்திய அதிகாரிக்கும் மற்றையது குறித்த நிலையத் தலைவருக்கும், மூன்றாவது பிரதி தனது அலுவலகத்திலும் வைக்கப்படல் வேண்டும்.

3.3 சுகாதார நிலையத்தை மேற்பார்வையிடச் செல்லும் போது நிலையத் தலைவரும் உடனிருத்தல் வேண்டும்.

3.4 மேற்பார்வையிடும் குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தர்களினதும், பொதுச் சுகாதார தாதிச் சகோதரிகளினதும் சமர்ப்பிக்கப்பட்ட மேற்பார்வை அறிக்கைகளினதும், மேற்பார்வை திட்டங்களையும் சரிபார்த்து அவர்களை வழிநடத்தி மாவட்ட மேற்பார்வையிடலை வலுப்படுத்தல் வேண்டும்.

## 4. கண்காணிப்பும் கணிப்பீடும்

4.1 வழிநடத்துதலிலும் மாவட்ட தாய் சேய் நலம் சம்பந்தமான கூட்டங்களிலும் பங்குபெற்றல்.

4.2 பொது சுகாதார தாதி சகோதரிகளினதும், குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தினரினதும் செயற்பாடுகளைக் கணிப்பிடுதல்.

4.3 பொது இனவிருத்திச் சுகாதாரத் தகவல் மையத்தின் மாவட்டக் கிளையின் செயற்பாடுகளை முக்கியமாகக் கண்காணித்தல் வேண்டும். (தகவல்களின் நம்பகத்தன்மை, மதிப்பிடுதல், மீள்பார்வை)

4.4 சுகாதார வைத்திய அதிகாரியின் மாதாந்தக் கூட்டங்களில், மற்றைய மாவட்ட சுகாதார அலுவலர்களுடன் பங்குபற்றுதலும் தேவையான ஆலோசனைகளை வழங்குதலும் அவசியமானது.
இவ்வாறன கூட்டங்களில் சுகாதார உத்தியோகத்தர்களின் அறிவை மேம்படுத்தலுடன் தாய் சேய் நல சேவைகளின் நடைமுறைகளின் தரத்தை மேற்பார்வையிடல் சம்பந்தமான கலந்துரையாடல் அவசியமானது.

4.5 அடையாளம் காணப்பட்ட பிரச்சனைகளைப் பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளருடனும் தாய் சேய் சுகாதார வைத்திய அதிகாரியுடனும் கிரமமாகக் கலந்துரையாட ஒழுங்குகள் செயயப்படல் வேண்டும்.

4.6 இவரின் மாவட்டததில் தாய் சேய் நலம் சம்பந்தமான பிரச்சனைகளை் கண்டறியப்பட்டு அவை பற்றிய ஆராய்வுகளை தாய் சேய் சுகாதார வைத்திய அதிகாரியுடன் இணைந்து திட்டமிட்டு அதைச் செயற்படுத்த வேண்டும். அத்துடன் பொது சுகாதார தாதிச் சகோதரிகளை மீளாய்வுகளையும் ஆராய்தல்களையும் செய்ய ஊக்கப்படுத்தல்.

4.7 காலாண்டு நடவடிக்கைகளின் தரமறியும் அறிக்கையில் நான்கு பிரதிகள் தயாரித்து அவற்றை பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர், பணிப்பாளர் தாய் சேய் நலம், பொது சுகாதார சேவைகள், தாதிப் பணிப்பாளர் ஆகியோருக்கு அனுப்புதல் வேண்டும்.

## 5. மனிதவள அபிவிருந்தி

5.1 மாவட்ட சுகாதார அலுவலர்களின் பயிற்சிகள், திட்டமிடல் மற்றும் பயிற்சிப் பட்டறைகளைத் திட்டமிடல் சம்பந்தமானவற்றை இனம்காண வேண்டும்.

5.2 தேசிய மட்டத்திலான பயிற்சிகளைப் பெற்ற பின்னர் மாவட்ட மட்டத்திலான பயிற்சிப் பட்டறைகளுக்குப் பயிற்றுவிப்பாளராகச் செயற்படல்.

5.3 மேற்பார்வையிடும் குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தர்கள் / பொது சுகாதார தாதிச் சகோதரிகளின் மேறபார்வை நடவடிக்கைகளை மாவட்ட மட்டத்தில் பலப்படுத்துவதற்காகக் காலாண்டுக்குரிய நடவடிக்கைகளின் தரத்தை அறியும் கூட்டங்களை நடத்துதல்.

5.4 தேவைகளைக் கண்டறிதல், வெற்றிடங்கள், புதிய உத்தியோகத்தர்களை உள்வாங்குதல் சம்பந்தமான பொதுச் சுகாதாரத்திற்கான மனித வளங்களைப் பலப்படுத்துவதற்குப் பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு உதவுதல்.

5.5 மாவட்ட மட்டத்திலான அடிப்படை மற்றும் தொழில் முறை சம்பந்தமான பயிற்சிகளுக்கு அவசியமான ஒத்துழைப்பை வழங்குதல் வேண்டும்.

**6. மற்றைய பணிகள்**

6.1 குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தர்களின் திறமைகாண் பரீட்சைகளின் செய்முறைப் பரீட்சைகளில் தலைமைப் பதவியையும், வாய்-மொழிப் பரீட்சைகளில் ஒரு அங்கத்தவராகவும் செயற்படுதல் வேண்டும்.

6.2 பதவி உயர்வுகளுக்கும், விஷேட பயிற்சிகளுக்கும், புலமைப்பரிசில்களுக்கும் பொது சுகாதார தாதிச் சகோதரிகள், மேற்பார்வையிடும் குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தர்கள் மற்றும் குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தர்களைத் தெரிவு செய்யும் போது பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு ஆலோசனை வழங்குதல் வேண்டும்.

6.3 தாய் சேய் சுகாதார வைத்திய அதிகாரிக்கு சுகாதார வைத்திய அதிகாரி பரிவுகளுக்கும் மற்றும் ஏனைய நிலையங்களுக்கும் தளபாடப் பொருட்களைக் கணக்கிடுதலிலும் அவற்றை விநியோகிப்பதிலும் மற்றும் ஏனைய பொருட்களை விநியோகிப்பதிலும் உதவுதல் வேண்டும். (உ+ம் மருத்துவ உபகரணங்கள் அச்சிடப்பட்ட தாள்கள், நோய்த்தடுப்பு மருந்துகள் மற்றும் சான்றிதழ்கள்)

6.4 அவசர மற்றும் அனர்த்த நிலைமைகளின் மாவட்ட வைத்தியக் குழுவுடன் சேர்ந்து பணியாற்ற வேண்டும்.

6.5 மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் குறிப்பிடும் ஏனைய கடமைகளையும் மேற்கொள்ள வேண்டும்.

..........................................
**வைத்திய எம்.எல்.ஆர்.சியம்பலாகொட**
**பிரதிப் பணிப்பாளர்**
**பொதுக் சுகாதார சேவைகள்**

..........................................
**வைத்திய பீ. ஜீ. மஹிபால**
**சுகாதார சேவைகள் பணிப்பாளர்**
**சுகாதார அமைச்சு**

Dr. P. G. Mahipala
Director General of Health Services
Ministry of Health,
385, "Suwasiripaya",
Rev. Baddegama Wimalawansa Thero Mawatha,
Colombo 10.

## தாய் சேய் சுகாதாரப் பிரிவின் அலுவலகப் பரிபாலனத்திற்கான வழிகாட்டல்கள்

மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் உள்ள தாய் சேய் சுகாதாரப் பிரிவில் பின்வரும் பதிவேடுகள், வரைபுகள், கோப்புகள் ஆகியவை பராமரிக்கப்படுவதையும் கிரமமான முறையில் பதியப்படுவதையும் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

1. சனத்தொகை, சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகள், வைத்திசாலைகள் மற்றும் முக்கிய தளங்கள் / இடங்கள் குறிக்கப்பட்ட மாவட்ட வரைபடம்.

2. தேசிய மாகாண மற்றும் மாவட்டவாரியான வாழ்க்கைப் புள்ளிவிபரவியல்.
   உதாரணம்: பிறப்பு வீதம்,
   கர்ப்பிணித் தாய்மார் மரண வீதம்
   சிசு மரண வீதம்
   5 வயதுக்குட்பட்ட சிறார்களின் மரண வீதம்
   நிறை குறைந்த பிறப்புகளின் வீதம்
   கருத்தடை முறைகள் பாவிப்போர் வீதம்

3. மாவட்டத்திலுள்ள வைத்தியசாலைகள், பிரசவவிடுதிகள், சிகிச்சை நிலையங்கள் தாய் சேய் சுகாதார பிணியாய்வு நிலையங்கள் பற்றிய தகவல்கள்.

4. பிரதேச செயலாளர் அலுவலகங்கள், உள்நாட்டு அரசாங்க அலுவலகங்கள் மற்றும் வலயக் கல்வி அலுவலகம் பற்றிய விபரங்கள்.

5. கீழ்வரும் கோப்புகள் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுவாரியாக பராமரிக்கப்படல் அவசியமானது.
   அ) குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தர் பிரவுகள், பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவுகள், பொது சுகாதார தாதிச் சகோதரி பிரிவுகள் மற்றும் பிணியாய்வு நிலையங்கள் ஆகியன அடையாளமிடப்பட்ட சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளின் வரைபடம்.

   ஆ) சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகள், பொது சுகாதார தாதிச் சகோதரி பிரிவுகள், பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவுகள் மற்றும் குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தர் பிரவுகள்வாரியான சனத்தொகை.

   இ) பிணியாய்வு நிலைய நேர அட்டவணைகள் (வெளிக்களத்தில் நிறை அளக்கும் நேர அட்டவணைகள் உட்பட)

   ஈ) பயிற்சிப் பட்டறைகள், மாதாந்தக் கூட்டங்கள் மற்றும் விஷேட நிகழ்ச்சிகளின் திகதிகள்.

உ) சுகாதார வைத்திய அதிகாரி பிரிவின் மேற்பார்வை உத்தியோகத்தர்களின் விபரங்கள்.

ஊ) மேற்பார்வை உத்தியோகத்தர்களின் முற்காரிய கிரமப்படலம் (Advance Prog.)

எ) மேற்பார்வை நேர அட்டவணைகள் மற்றும் மேற்பார்வை அறிக்கைகள்.

ஏ) அங்கீககரிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை, சேவையில் உள்ளவர்களின் எண்ணிக்கை மற்றும் வெற்றிடங்களின் எண்ணிக்ளை உள்ளடங்களாக பணிபுரிவோர் விபரங்கள்.

ஐ) பாடசாலைகள், முன்னிலைப் பள்ளிகள், அரச சார்பற்ற நிறுவனங்கள், தனியார் வைத்திய நிலையங்கள், முதியோர் இல்லங்கள், சிறுவர் இல்லங்கள் மற்றும் சுகாதாரம் சம்பந்தமான ஏனைய நிலையங்கள்.

6. பின்வரும் முக்கிய செயல்திறன் சுட்டிகள் தரப்படுத்தப்பட்டு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுவாரியான வரைபுகள் வடிவில், முன்னைய இரு வருடங்களுக்கும் ஆண்டு ரீதியாகவும் இந்த வருடத்திற்கு காலாண்டு ரீதியாகவும் காட்சிப்படுத்தப்படல் வேண்டும்.

அ) கர்ப்பிணித் தாய்மார்களின் நேரகாலத்துடனான பதிவுசெய்தல் வீதம்

ஆ) பிரசவத்தின் பின்னரான பராமரிப்புச் வீதம்

இ) கருத்தடை முறைகள் பாவிப்போர் வீதம்

ஈ) தடுப்புமருந்தேற்றல் வீதம் - DPT-1/ஐங்கூட்டு-1/மீசில்ஸ்/MR

உ) சிசுக்கள் மற்றும் 1-2 வயதுடைய சிறார்களில் நிறைக் குறைவுடையோர் வீதம்

ஊ) பாடசாலை சுகாதார பரிசோதனைகள் நடாத்தப்பட்ட வீதம்

எ) 'பப்' பரிசோதனை வீதம் (இலக்குப் குழுவினரிடையே)

ஏ) கடந்த 5 வருடங்களில் மாவட்டதில் புதிகாக குடும்பத்திட்டமிடல் முறைகளை ஏற்றுக்கொணடோர் வீதம்.

7. மேற்பாற்வையிடல் நேர அட்டவணை - மாவட்ட தொழில்நுட்பக் குழுவின் காலாண்டுக்குரிய பொது நேர அட்டவணை)

8. மேற்பார்வை அறிக்கைகளைக் கொண்டுள்ள கோப்புகள் மற்றும் நடாத்தப்பட்ட விஷேட செயற்பாடுகளுக்கான ஒரு கோப்பு.